# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

---

*[1988 ஓகத்து மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

*1988, ஓகத்து 19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

*விலை: சதம் 45* *தபாற் செலவு: சதம் 70*

# 1988 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

[1988, ஓகத்து மாதம் 16 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 38/88

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தியோராம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(4) (அ) தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியாகக் கொள்ளப்படுவதற்கு ஏற்கனவே உரித்துடையதாகவுள்ள ஒரு கட்சி நீங்கலாக ஏதேனும் அரசியற் கட்சியின் செயலாளர், பந்தி (இ) யின் அத்துடன் பந்தி (ஈ) யின் ஏற்பாடுகளுக்கு அமைய, தேர்தல்களின் நோக்கத்திற்காக அத்தகைய கட்சி அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியற் கட்சியாகக் கருதப்படல் வேண்டுமென அக்கட்சியின் சார்பில் ஆணையாளருக்கு எந்த நேரத்திலும் எழுத்துமூலமான ஒரு விண்ணப்பம் செய்யலாம். அத்தகைய கட்சி அவ்வாறு கருதப்பட்டால், அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களுள் எந்த ஒரு சின்னம் அக்கட்சிக்குக் குறித்தொதுக்கப்பட வேண்டுமென அக்கட்சி விரும்புகின்றது என்பதை விண்ணப்பத்தில் குறிப்பிடுதலும் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வின் கீழ் ஒரு விண்ணப்பம் செய்யப்படும் நேரத்தில் ஓர் அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய கட்சியின் அமைப்பு விதியின் பிரதி ஒன்றையும் அத்துடன் அத்தகைய கட்சியின் பதவி தாங்குநரின் நிரல் ஒன்றையும் ஆணையாளருக்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(இ) பந்தி (அ) விலுள்ள எதுவும், ஒரு கட்சியின் செயலாளரை, பின்வரும் எந்தவொரு காலப்பகுதிக்குள் எந்த நேரத்திலும் அப்பந்தியின் கீழ் ஒரு விண்ணப்பம் செய்வதனை இயலச் செய்வதாக வாசிக்கப்படவோ அல்லது பொருள் கொள்ளப்படவோ ஆகாது. அக்காலப்பகுதிகளாவன—

(i) பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான பிரகடனத் தேதியில் தொடங்கி அல்லது 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் ஒரு தேர்தலை நடாத்தும்படி தேவைப்படுத்தும் ஒரு கட்டளைத் தேதியில் தொடங்கி, அத்தகைய பிரகடனத்தில் அல்லது கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வாக்கெடுப்புத் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதி ; அல்லது

(ii) 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒரு கட்டளைத் தேதி தொடங்கி, அக்கட்டளையினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வாக்கெடுப்புத் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதி ; அல்லது

(iii) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ், அச் சட்டத்தின் கீழான ஒரு தேர்தல் தொடர்பிலான ஓர் அறிவித்தல் தேதி தொடங்கி, அச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் அத்தேர்தலுக்கான ஒரு கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள வாக்கெடுப்புத் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதி ; அல்லது

(iv) 1981 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, அபிவிருத்திச்சபைத் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்கீழ், அச்சட்டத்தின்கீழான ஒரு தேர்தல் தொடர்பிலான ஓர் அறிவித்தல் தேதி தொடங்கி, அச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அத்தேர்தலுக்கான ஓர் அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டுள்ள வாக்கெடுப்புத் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதி ; அல்லது

(v) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் கீழான ஒரு தேர்தல் தொடர்பில் அக்கட்டளைச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழான ஓர் அறிவித்தல் தேதி தொடங்கி, அக் கட்டளைச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின்கீழ் அத்தேர்தலுக்கான ஓர் அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டுள்ள வாக்கெடுப்புத் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதி ; அல்லது

(vi) 1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட பிரகடனத் தேதி தொடங்கி, அப்பிரகடனத்தால் நியமிக்கப்பட்ட வாக்கெடுப்புத் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதி.

(ஈ) ஓர் அரசியற் கட்சி தொடர்பில் பந்தி (அ) வின்கீழ் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பம் ஆணையாளரால் அனுமதி மறுக்கப்பட்டால், முதலாவது விண்ணப்பத்தை அனுமதி மறுக்கும் கட்டளைத் தேதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதி முடிவுறும்வரையில், அந்த அரசியற் கட்சி தொடர்பில் அப்பந்தியின்கீழ் விண்ணப்பமெதுவும் செய்யப்படலாகாது."

---

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*